நாள் 16.10.2023 O.S 295 of 2019 .வா.சா.1 அண்ணாத்துரை

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமானம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி

என் தாத்தா முத்துகோனார் கிரையம் வாங்கிய சொத்தை வழக்கில் 1ம் தபசிலாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான்.அந்தசொத்தில் தென்பக்கம் ஒரு பகுதியை என் தாத்தா முத்து கோனார் மற்றொரு முத்துகோனருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 1943ம் ஆண்டு கிரையம் கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். அதன் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ1. அந்த காலத்தில் அந்த கிரைய சொத்திற்கு கீழ்பக்கம் அருள் உடையார் என்ற நபர் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் பிராதில் தற்போது கருப்பையா புஞ்சைக்கும் மேற்குஎன காட்டியுள்ளேன் என்றால் சரிதான். கருப்பையா அருள் உடையாருக்கு என்ன உறவு என்றால் மருமகன் ஆகும். அருள் உடையார் சொத்தை அவரது மருமகன் தான் அனுபவம் செய்துவருகிறார் என்றால் சரிதான். என் தாத்தா முத்துகோனார் கிருஷ்ண கோனருக்கு கிரையம் கொடுத்த இடம் வழக்கு சொத்திற்கு எந்தபக்கம் என்றால் மேல்பக்கம் ஆகும். கிருஷ்ண கோனார் கிரையம் வாங்கிய சொத்தானது முத்துகோனார் கிரையம் வாங்கிய சொத்திற்கு எந்தபுறம் என்றால் தென்புறம் ஆகும். 1ம் தபசில் சொத்திற்கு மூலபத்திரத்தில் அளவுகள் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. தச்சுமுழத்தில் அளவுகள் காட்டப்பட்டுள்ளது. பிராதில் அடி அளவு காட்டப்பட்டுள்ளது. என் தாத்தாவிற்கு சுப்பம்மாள், திருமலைவடிவம்மாள் என்ற இரண்டு பெண்மக்கள் வாரீசுகள் என்றால் சரிதான். மூத்த மகளான திருமலைவடிவம்மாளுக்கு இரண்டு ஆண் குழந்தைகள். சுப்பம்மாளுக்கு இரண்டு ஆண்கள். சுப்பம்மாளின் இரண்டு

பையன்களும் தற்போது உயிரோடு இல்லை. அவரது வாரீசுகள் உள்ளனர். பிராது 2ம் தபசில் சொத்து பிராது 1ம் தபசில் சொத்தின் கீழ்பகுதி கிடையாது என்றால் சரிதான். பிராது2ம் தபசில் சொத்தை பொறுத்து நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. பிராது 2ம் தபசில் சொத்தினை 3,4 பிரதிவாதிகள் என்னிடம் கிரையம் கேட்கவில்லை என்றால் சரிதான். அந்தசொத்தின் வடக்கு ஓரத்தில் நான் முள்வேலி அமைத்தேன் என்றால் சரியல்ல. தெற்கோரம் அமைத்தேன். அதற்காக தான் 3,4 பிரதிவாதிகள் என்மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான். நானும் கொடுத்தேன். அதற்கு முள்வேலி எடுக்கப்பட்டது என்றால் அவர்களே எடுத்துவிட்டார்கள். அதற்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிராது 2ம் தபசில் சொத்தில் எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல.